

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயம்புத்தூர்

சிக்காரம்பாளையம் ஊராட்சி

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், காரமடை ஊராட்சி ஒன்றியம், சிக்காராம்பாளையம் ஊராட்சி (ம) கிராமம் மற்றும், நில அளவை எண்-341/2, 343/2ஏ,2பி,345/3 - யில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணைய தள விண்ணப்ப எண்: ES3TCIFP

அளவு : 1அங்குலம் = 33அடி (1:400)

வ

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 4.11 ஏக்கர் (அ) 16650.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 90 மனைகள்

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடு :

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:-

மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு: 5169.53 ச.மீ

பூங்காவுக்கு தேவையான பரப்பளவு:-

தேவையான பரப்பளவு - (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)x10.0 %

(16650.00 - 5169.53) X10.0% = 1148.04 ச.மீ (10.0%)

பூங்கா-1 - 221.70 ச.மீ
பூங்கா-2 - 190.99 ச.மீ
பூங்கா-3 - 768.85 ச.மீ

பூங்கா ஒதுக்கீடு - 1181.54 ச.மீ (10.29%) (ஒப்படைக்கப்பட்டவை)

EWSக்கு தேவையான பரப்பளவு:-

தேவையான பரப்பளவு - (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு)x10.0 %

(16650.00 - 5169.53) X10.0% = 1148.04 ச.மீ (10.0%)

EWS ஒதுக்கீடு - 1167.04ச.மீ (10.16%) மனை எண்-(35-46,49-54): 18 மனைகள்

TANGEDCO (ம) பொது உபயோகத்திற்கு தேவையான பரப்பளவு:-

(மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு) X 0.5%

(16650.00 - 5169.53) X0.5% = 57.40 ச.மீ (0.5%)

தேவையான பரப்பளவு : 57.40 ச.மீ (0.50%)

TANGEDCO ஒதுக்கீடு : 57.90 ச.மீ (0.50%) (ஒப்படைக்கப்பட்டவை)

பொது உபயோகம் ஒதுக்கீடு : 60.35 ச.மீ (0.52%) (ஒப்படைக்கப்பட்டவை)

மூலை முடுக்கு:-

12.0மீ வரை உள்ள சாலைகளுக்கு 1.5மீ X 1.5மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1. அரசாணை எண். 18 ந. நி (ம) கு. வ. துறை நாள்: 04.02.2019 (ம) அரசாணை எண். 16 ந. நி (ம) கு. வ. துறை நாள்: 31.01.2020 ன் படி சாலை , பொது உபயோக பகுதி (ம) TANGEDCO -க்கான பகுதி ஊராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.
2. இம்மனைப்பிரிவிற்கு ஊராட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்க்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் சிக்காரம்பாளையம் ஊராட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு துறையால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவுவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. உத்தேச மனைப்பிரிவு சாலைகள்,மழைநீர் வடிகால் வசதி குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்குகள் ஆகியவை ஊராட்சி விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்படவேண்டும்.
7. அரசாணை எண்:141 வீட்டு வசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்: 16.07.2022 - ன் படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
8. மனையிடத்தின் ஊடே அமையும் குறைந்த மின்அழுத்த பாதையினை சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மனுதாரரால் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

ம.வ(கோ.மா)எண் : 103/2024 (இணையவழி)

Signature valid

Signed by: Joint Director
Location:Coimbatore
Date:2024.04.08 11:31:48

Signature valid

Signed by: Village Panchayat President
Location:Coimbatore
Date:2024.12.31 17:20:36

சு.திவ்யா
அளவர் / உதவி வரைவாளர்

சு.பாபு
வரைவாளர் நிலை - III

பொ.வசு...
கட்டிடகலை/ திட்ட உ...

உதவி இயக்குநர் / இணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கோயம்புத்தூர் மாவட்டம்